# சுடர் ஒளி
THE SUDAR OLI
சுடர் ඔළි
விலை 10/=
31.07.2020 வெள்ளிக்கிழமை


# சம்பந்தன், ஹக்கீம், ரிஷாத் மூவரும் ஆபத்தானவர்கள்!!!

## பிதற்றுகிறார் பீரிஸ்



கொழும்பு, ஜூலை 31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆகிய மூவரும் நாட்டுக்கு ஆபத்தானவர்கள். அவர்களின் கோரிக்கைகள் எதனையும் ராஜபக்ஷ அரசு நிறைவேற்றவேமாட்டாது. 6

## புதினம் ? தெரியுமோ

கிளிநொச்சிப் பக்கத்தில் ஒரு வேட்பாளரின் ஆதரவாளர்கள் வீடு வீடாகச் சென்று பரப்புரை செய்கையில் ஒரு வதந்தியையும் பரப்பிவிட்டுப் போகிறார்கள். இந்த முறை விரும்பின சின்னத்துக்கு வாக்களிச்சிட்டு, எங்கட சேரின்ர இலக்கத்துக்கு மட்டும் வாக்களிச்சால் காணும், தப்பித்தவறி நீங்கள் ரண்டு, மூண்டு இலக்கங்களுக்கு கீறினால் அது செல்லாத வாக்காகப் போடும் என்று சொல்கிறார்களாம். அப்படியில்லையே, விரும்பிய மூன்று இலக்கங்களுக்கு போடலாமென்று சொல்கிறார்களே என மக்கள் கேட்டால், அதெல்லாம் பழைய சட்டத்தில இருந்தது. இப்ப சட்டம் மாத்தியாச்சு, எல்லாம் புதுச் சட்டம். ஒரு விருப்பிலக்கத்துக்கு மட்டும் தன் புள்ளடி போடலாம். அதால எங்கட சேருக்கு மட்டும் போடுங்கோ என்று கூலாகச் சொல்கிறார்களாம். ஆனால் உண்மையில் அப்படி சட்டமும் மாற்றப்படவில்லை என்றும், விரும்பிய மூன்று வேட்பா 6

## நேருக்கு நேர் கூட்டம்: குழப்பத்துக்கு முயற்சி?

கிளிநொச்சி ,ஜூலை 31

கிளிநொச்சி மாவட்டத்தில் இறுதிநாள் தேர்தல் பரப்புரைக்கு ஒரேநேரத்தில், நேர் எதிர் இடங்களில் இருகட்சிகள் கூட்டம் நடத்துவதற்கு பொலிஸார் அனுமதி வழங்கியுள்ளனர். இது அந்தக் கட்சிகளிடையே வலிந்து முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. தேர்தல் 6

## 166 பேர் வீட்டுக்கு!

கிளிநொச்சி ,ஜூலை.31

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள இயக்கச்சி தனிமைப்படுத்தல் நிலையத்தில் , தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 166 பேர் இன்று வெள்ளிக்கிழமை காலை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப் 6

## களவெடுக்க முயன்றவர் கலிகையில் சிக்கினார்

வடமராட்சி, ஜூலை 31

வடமராட்சி, கலிகை பகுதியில் உள்ள வீடொன்றில் திருட முயற்சித்தவரை வீட்டு உரிமையாளர்கள் மடக்கிப் பிடித்தனர். இச்சம்பவம் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் கலிகைச் சந்தியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது. அந்த வீட்டின் பின் 6

## பிள்ளையானுக்கு அமைச்சுப் பதவி?

கொழும்பு,ஜூலை 31

நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான 6

## சஜித்துக்கு ஆதரவளித்த 37 பேர் இன்று 'அவுட்'!

### ரணில் அதிரடி

கொழும்பு,ஜூலை.31

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்கும் மேலும் 37 உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமையை ஐக்கிய தேசியக் கட்சி இன்று அதிரடியாக நீக்கியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக 6

## சகல மாணவருக்கும் அடையாள இலக்கம்!

### கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு,ஜூலை 31

அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும், மாணவர் அடையாள இலக்கத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வியமைச்சர் டலஸ் அழ கப்பெரும தெரிவித்துள்ளார். தற்போது பாடசாலைகளில் கல்வி பயிலும் 43 லட்சம் மாண 6

## வாள்முனையில் நகைக் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் வீட்டில் இருந்தவர்களை தாக்கி, வாளைக் காட்டி அச்சுறுத்தி நகைகள் அபகரிக்கப்பட்டன. இந்தச் சம்பவம் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய 5

## 'வீக் கொரோனா' நபரால் 70 பேர் தனிமைப்படுத்தல்!

யாழ்ப்பாணம், ஜூலை.31

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை 7ஆம் விடுதியில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கு "வீக் கொரோனா" ஏற்பட்ட நிலையில் அந்த விடுதியில் சிகிச்சை பெற்ற நோயாளிகள் அனைவரும் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

'வீக் கொரோனா' என உறுதிப்படுத்தப்பட்டவர் 7ஆம் விடுதியின் மலசல கூடத்தைப் பயன்படுத்தியதோடு, சிற்றுண்டிச் சாலைக்கும் சென்றிருந்தார். இதனடிப்படையிலேயே வடக்கு மாகாண சுகாதார 6

## கொரோனாவுக்கு அஞ்சாமல் திரண்டு சென்று வாக்களிக்குக!

### பேராசிரியர் ஹூல் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை.31

மக்கள் கொரோனா தொடர்பில் அச்சப்படத் தேவையில்லை.தங்களது உரிமையை நிலைநாட்ட அனைவரும் வாக்களிக்க வேண்டும் என தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்துள்ளார்.

இன்றையதினம் யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் 5

## மின்சார பாவனையாளர்களுக்கு ரூபா 300 கோடி சலுகை

கொழும்பு, ஜூலை 31

இலங்கை முழுவதுமுள்ள அனைத்து மின்சார பாவனையாளர்களுக்கும் ரூபா 300 கோடி சலுகை வழங்குவதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது. இதற்க மைய, மார்ச், ஏப்ரல் மற்றும் மே ஆகிய மாதங்களில் நுகர்வுக்குட்படுத்திய மின்சார பாவனைக்கே இவ்வாறு சலுகை வழங்கப்ப டவுள்ளது. இதன்படி, 67 இலட்சம் மின் பாவனையாளர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

கொரொனா வைரஸ் பரம்பல் தீவிரம் அடைந்த நிலையில், மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் நாடு முழுமையாக முடக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

# கொரோனாப் பரவலை தடுக்க தீவிர நடவடிக்கை

### சுகாதாரப் பிரிவு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 31

கொரோனா கொத்தணியில் நோயாளிகள் அடையாளம் காணப்படுவதில் சில சமூகப் பரவல் காணப்பட்டாலும் இந்த நோயாளிகள் ஊடாக வைரஸ் சமூகத்திற்குள் பரவுவ தனைத் தடுப்பதற்கு நடவ டிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது என்று சுகாதார பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சு மற்றும் ஏனைய பிரிவுகள் இணைந்து கொரோனா பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார். சுகாதார பிரிவு, பாதுகாப்புப் பிரிவு மற்றும் புலனாய்வுப் பிரிவு நோயாளிகளுக்கு அருகில் செயற்பட்டவர்களைக் கண்ட றியும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன என்று சுகா தார பணிப்பாளர் தெரிவித் துள்ளார். கொரோனாப் பரவல் தொடர்பில் வெளி யிட்ட விசேட அறிக்கையி லேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ரி1)

## தோட்டத் தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்கு

மஸ்கெலியா, ஜூலை 31

மஸ்கெலியா மற்றும் நல்லதண்ணிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரு வெவ்வேறு பகுதிகளில் தோட்டத் தொழிலாளர்கள் குளவிக் கொட் டுக்கு இலக்காகிய நிலையில் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகிய நிலையில், 14 பெண்களும் ஓர் ஆணும் மஸ் கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மறே தோட்ட வலதல பிரிவில் தேயிலைக் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த 11 பெண் தொழிலா ளர்களுடன் ஓர் ஆண் தொழிலாளியும் குளவி கொட்டுக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமி மலை தோட்ட பெரிய சூரியகந்தை பிரிவில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த போது தேயிலைச் செடிக்கு அடியிலிருந்த குளவிக் கூடு கலைந்த தில் மூன்று பெண்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற் றுவருகின்றனர் எனவும் மஸ்கெலியா மாவட்ட வைத்திய அதிகாரி லியத்தபிட்டிய தெரிவித் துள்ளார். (ரி2)

## லங்காபுர பிரதேச செயலக அதிகாரிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை




பொலநறுவை, ஜூலை 31

பொலநறுவை லங்காபுர பிரதேச செயலக அதி காரி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, லங்காபுர பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் அவர்களு டன் நெருங்கிச் செயற்பட்ட ஆயிரம் பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

நேற்று இரவு மாத்திரம் கொரோனா நோயாளியு டன் நெருங்கிச் செயற்பட்ட 325 பேருக்கு பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன என மாவட்ட சுகாதார அதிகாரிகள் தெரி வித்துள்ளனர். அப் பரிசோதனையில் பலருக்கு கொரோனா தொற்றியமை உறுதியானால் அந்தப் பகுதிக்கு பயணத்தடை மேற்கொள்ளப்படவுள்ள தாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ரி3)





## போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட பருந்து! பொலிஸாரால் மீட்பு

கொழும்பு, ஜூலை 31

மீகொட நாவலமுல்ல பகுதியில் அமைந் துள்ள விலங்குப் பண்ணையொன்றில் போதைப்பொருள் கடத்தல் நடவடிக் கைக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் பருந்து ஒன்று பொலிஸா ரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேல் மாகாண புலனாய்வுப் பிரிவின் அதிகா ரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய, அத்துருகிரிய பொலிஸார் முன்னெடுத்த சோதனையின்போதே இந்தப் பருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருளை விநியோகிப்பதற்கு பாதாள உலகக் குழு தலைவராகக் கருதப்படும் “அங்கொடா லொக்கா” என்பவரால் இந்தப் பருந்து பயன்படுத் தப்பட்டு வந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணை களில் தெரியவந்துள்ளது. இந்தச் சோதனையின்போது அந்தப் பண்ணையில் பணியாற்றிய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களி டமிருந்து துப்பாக்கியும், வெடிமருந்துப் பொருள் களையும் பொலிஸார் கைப் பற்றியுள்ளனர். கைதுசெய்யப்பட்ட இருவரும் அங்கொட லொக்காவின் நெருங்கிய கூட்டாளிகள் என்று தெரி விக்கப்படுகிறது. “குசா அலி சீ ஹாக்” என்று அழைக்கப்படும் இந்த பருந்து சுமார் 15 கிலோகிராம் எடையைச் சுமக்கும் திறன் கொண்டதாக நம்பப்ப டுகிறது. அத்துருகிரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ரி3)

## வெளிநாட்டு மாலுமிகள் இலங்கை வந்தடைவு

கொழும்பு, ஜூலை 31

மூன்று விமானங்களில் 111 வெளிநாட்டு மாலுமிகள் நேற்று அதிகாலை இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

77 இந்திய மாலுமிகள் நேற்று அதிகாலை 4.20 மணிக்கு சென்னையிலிருந்து இண்டிகோ எயார்லைன்ஸ் விமான சேவைக்குச் சொந்த மான 6E9034 என்ற விமானத்தில் மத்தள விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இதேவேளை, 32 மாலுமிகள் அதிகாலை 1.45 மணிக்கு டோகாவிலிருந்து கட்டார் எயார்வேஸ் விமான சேவைக்குச் சொந்த மான கியூ.ஆர்668 என்ற விமானத்தின் மூல மாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்த டைந்தனர். மேலும், இரண்டு மாலுமிகள் அபுதாபியில் இருந்து எடிஹாட் எயார்வேஸ் விமான சேவைக்குச் சொந்தமான EY264 என்ற விமானத்தில் நள்ளிரவு 12.05 மணியள வில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்த டைந்துள்ளனர். (ரி3)

## இராஜாங்கனையில் பயணக் கட்டுப்பாடுகள் முற்றாக நீக்கம்

அநுராதபுரம், ஜூலை 31

கொரோனாத் தொற்றுக் காரணமாக அநுராதபுரம், இராஜாங்கனைப் பகுதியில் அமுல்படுத்தப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடுகள் இன்றுமுதல் முற்றாக நீக்கப்பட்டுள்ளது.

அந்த பகுதியிலிருந்து பல புதிய கொரோனாத் தொற்றா ளர்கள் கண்டறியப்பட்டமையினால் இராஜாங்கனைப் பகுதிக்கு பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

எனினும், கடந்த 19 ஆம் திகதி முதல் இதுவரை இந்தப் பிரதேசங்களில் எந்தவொரு தொற்று நோயாளரும் இனங்காணப்படாத நிலையில் தற்போது இராஜாங்கனை பிரதேசத்தில் கொவிட்19 தொற்று பரவல் வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைவாக பயணக் கட்டுப்பாடுகள் இன்று காலை முதல் முற்றாக நீக்கப்பட்டுள்ளது. (ரி2)




# கின்னஸ் புத்தகத்தில் மேஜர் ஜெனரல்கள்

கொழும்பு, ஜூலை 31

இலங்கை இராணுவத்தின் மேஜர் ஜெனரல் பதவியிலிருக்கும் இரட்டையர்களான மேஜர் ஜெனரல் பூரக செனவிரத்ன மற்றும் மேஜர் ஜெனரல் ஜயந்த செனவிரத்ன ஆகியோர் கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெறத் தகுதிபெற்றுள்ளனர்.

இராணுவத் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற இந்த நிகழ்வின் முதல் அங்கமாக கையொப்பமிடும் நிகழ்வு இடம்பெற்றது.

இரட்டைச் சகோதரர்களான இலங்கை சமிக்ஞை படையணியைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் பூரக செனவிரத்ன பாதுகாப்பு தலைமை பிரதானி அலுவலகத்தில் பதவிநிலை பிரதானியாகவும், மேஜர் ஜெனரல் ஜயந்த செனவிரத்ன சிங்கப் படையணியின் படைத் தளபதி மற்றும் மேற்கு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் படைத் தள பதியாகவும் தற்போது பதவி வகிக்கின்றார்கள்.

இவர்கள் இருவரும் ஒரே நாளில் பிறந்து, ஒரே நாளில் பாடசாலைக்கு உட்பகுத்தப்பட்டு உயர்தரம் வரை ஒன்றாகப் படித்து, பின்னர் இலங்கை இராணுவத்தில் கெடெற் அதிகாரிகளாக ஒன்றாக இணைந்து கொண்டனர். பின்னர் குவேட்டாவில் வெளிநாட்டுப் பயிற்சியை ஒன்றாக மேற்கொண்டு இராணுவத்தில் அனைத்து பதவி உயர்வுகளையும் ஒன்றாகவே பெற்று இருவரும் ஒரே தினத்தில் இராணுவத்திலிருந்து ஓய்வு பெறவுள்ளனர்.

கின்னஸ் புத்தகத்திற்கு உட்புகுத்துவதற்கு தகுதி பெற்ற இந்த இராணுவ உயரதிகாரிகளது வீடியோக் காட்சிகள் பார்வையாளர்களுக்காக இந்த நிகழ்வினூடாக முன்வைக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து இரட்டையர்களது முறையான ஆவணங்களில் கையொப்பமிடப்பட்டது. நிகழ்வில் இராணுவத் தளபதியால் இந்த இரட்டை அதிகாரிகளது அனைத்து இராணுவ வாழ்க்கை ஆவணங்களும் கின்னஸ் உலக சாதனை பிரதிநிதிக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

# முல்லைத்தீவில் தேர்தல் அறிவுறுத்தல் வகுப்பு

முல்லைத்தீவு, ஜூலை 31

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2020 நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் முதன்மை தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் வகுப்பு முல்லைத்தீவு தேர்தல்கள் அலுவலகத்தினால் நேற்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தலைமையில், முல்லைத்தீவு மாவட்டச் செயலக புதிய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

வன்னி தேர்தல் மாவட்டத்தின், முல்லைத்தீவுத் தேர்தல் தொகுதியில் வாக்கெடுப்பு நிலையங்களில் முதன்மை தலைமை தாங்கும் அலுவலர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கான இறுதி அறிவுறுத்தல் வகுப்பே நடைபெற்றுள்ளது.

மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கா.காந்தீபன் கலந்து கொண்டு இந்த அலுவலர்களுக்கு செயன்முறை ரீதியான பயிற்சிகளை வழங்கியுள்ளார். இதன்போது, நாட்டின் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக, தேர்தலின்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விசேட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றும் செயன்முறைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (ரி2-19)

# சூரியசக்தி மின்சாரம் கொள்வனவு ரூ. 2,737 மில்லியன் இலாபம்

## மின்சக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 31

குறைந்த விலைக்கு சூரிய சக்தி மின்சாரம் கொள்வனவு செய்ததால் மின்சார சபைக்கு 2,737 மில்லியன் ரூபா இலாபம் கிடைத்துள்ளது என மின் சக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த வருடத்தின் மூன்றாம் காலாண்டில் ஓர் அலகு 10 ரூபா வீதம் 150 மெகா வோட்ஸ் சூரியசக்தி மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டது. குறைந்த விலையில் மின்சாரம் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து இவ்வாறு மின்சாரம் பெறப்பட்டுள்ளது. ஒரு மெகா வோட்ஸ் மின்சாரம் கொள்வனவு மூலம் 50 ஆயிரம் ரூபா சேமிக்க முடிந்துள்ளது. நாளாந்தம் ரூபா 7,50,000 சேமிக்க முடிந்துள்ளது. இதனூடாக வருடாந்தம் 2,737 மில்லியன் ரூபா இலாப மீட்ட முடியும்.



நான்காம் காலாண்டில் மேலும் 15 மெகா வோட்ஸ் மின்சாரம் கொள்வனவுசெய்யப்பட இருக்கின்றது. நஷ்டத்தில் இயங்கும் மின்சார சபை 2023 ஆண்டில் இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சகல அரச நிறுவனங்களையும் இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுவதே அரசின் இலக்காகும் என்றும் தெரிவித்துள்ளார். (ரி3)

# மட்டு. சாளம்பஞ்சனையில் யானைகள் அட்டகாசம்

## வீடு முற்றுமுழுதாகச் சேதம்

மட்டக்களப்பு, ஜூலை 31

மட்டக்களப்பு புணானை மேற்கு, சாளம்பஞ்சேனை கிராமத்தினுள் புகுந்த யானைகள் வீடு மற்றும் தோட்டங்களைச் சேதப்படுத்தியுள்ளன என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக் கிராமத்தின் குடியிருப்பு பகுதியினுள் கடந்த வியாழக்கிழமை இரவு புகுந்த யானைகள், வீடொன்றை முற்றாக உடைத்துச் சேதப்படுத்தியுள்ளமையுடன், அருகில் இருந்த கச்சான், கத்தரி, வெண்டி, மிளகாய் உள்ளிட்ட வீட்டுத் தோட்ட பயிர்களையும் சேதப்படுத்தியுள்ளன. தமது பகுதிகளில் தொடர்ச்சியாக யானைகளின் அட்டகாசம் இடம்பெற்று வரும் நிலையில், தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன என தெரிவித்துள்ள மக்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் யானை வேலி அமைத்துத்தருமாறும் கோரிக்கை விடுக்கின்றனர். (ரி3-159)

# வெளிநாடுகளில் சிக்கி இருந்த இலங்கையர்கள் வருகை

கொழும்பு, ஜூலை 31

ஜப்பான் மற்றும் கட்டாரில் சிக்கியிருந்த 47 இலங்கையர்கள் இன்று அதிகாலை நாட்டை வந்தடைந்தனர்.

அதன்படி கட்டாரில் பணியாற்றிய 41 இலங்கையர்கள் மற்றும் ஜப்பானில் பணியாற்றிய 6 இலங்கையர்கள் ஆகியோரே இரண்டு விமானங்களில் இன்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

நாட்டை வந்தடைந்த அவர்கள் அனைவரும் விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோனைக்கு உட்படுத்தப்பட்டு, பின்னர் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேவேளை, சென்னையிலிருந்து இண்டிகோ எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான 6E9034 என்ற விமானம் மத்தள விமான நிலையத்தில் இன்று அதிகாலை தரையிறங்கியது.

இந்த விமானமானது காலி துறைமுகத்தில் பணியாற்றி வந்த 58 இந்திய மாலுமிகளை அவர்களது நாட்டுக்கு அழைத்துச் செல்ல வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

கடல் கொந்தளிப்பு

# அவதானமாக செயற்பட மக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 31

தென்னிலங்கை கடற்பரப்பில் கடல் கொந்தளிப்பாக உள்ளமையினால் கடல்நீர் தரைக்கு வரும் ஆபத்து உள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

பேருவளையில் இருந்து காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்பில் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டுள்ளது. இப் பிரதேசங்களில் கடலுக்கு அருகில் வாழும் மக்கள் மிகுந்த அவதானமாகச் செயற்படுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் மழையுடன் கூடிய காலநிலை நிலவக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கமைய சப்ரகமுவ, மேல் மற்றும் மத்திய மாகாணத்திலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டத்திலும் இடைக்கிடையே மழை பெய்யும்.

இதேவேளை, தெற்கிலும் பொலநறுவை, மன்னார், மாத்தளை, மாவட்டங்களிலும் மத்திய மாகாணத்திலும் மணிக்கு 60 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரி1)

# கருக்கலைப்பு நிலையம் நடத்திய போலி வைத்தியர் நேற்று கைது

*கொழும்பு, ஜூலை 31*

நிட்டம்புவை பகுதியில் கருக்கலைப்பு நிலையம் ஒன்றை நடத்தியபோலி வைத்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று மாலை 5 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது. 40 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபரிடம் இருந்து கருக்கலைப்புக்காக பயன் படுத்தும் உபகரணங்கள் சிலவும் வான் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் நிட்டம்புவைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி2)

# பல குறைபாடுகளுடன் சங்கானை பொதுச்சந்தை

*யாழ்ப்பாணம், ஜூலை 31.*

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின், சங்கானையில் அமைந்துள்ள பொதுச்சந்தை பல குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றது. இங்கு தினசரி நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்றுகூடுகின்றனர்.

இதனால் வியாபாரிகள் மட்டுமல்லர் பொதுமக்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள்.

இச் சந்தைக்கு வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு மட்டுமல்லாது காரைநகர் போன்ற தூர இடங்களில் உள்ள வியாபாரிகளும் வருகின்றமை வழக்கம். இச் சந்தையில் கடந்த இரு வருடங்களுக்கு முன்பு பல இலட்சம் ரூபா செலவில் இரு மாடிகளைக் கொண்ட முப்பதுக்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மரக்கறி விற்பனைப் பகுதி மட்டும் பழைய இடத்திலேயே இயங்குகின்றது. இங்கு 50 இற்கும் மேற்பட்ட வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில், சந்தை வளாகத்திலுள்ள மலசல கூடங்கள் மற்றும் தண்ணீர் வசதிகளில் குறைபாடுகள் காணப்படுகின்றன. ஒரு மலசலகூடம் பூட்டிய நிலையிலேயே உள்ளது. ஏனையவை பாவிக்க முடியாதவாறு அசுத்தமாக காணப்படுகின்றன. இதனால் அங்குள்ள வியாபாரிகளும் பொதுமக்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். (ரி2-115)



ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில்

# சுகாதார வழிகாட்டல்களை பேணுமாறு அறிவுறுத்தல்

*கொழும்பு, ஜூலை 31*

கொவிட்19 வைரஸின் தாக்கம் மற்றும் நாட்டின் தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் முக்கிய, வழிகாட்டல்களைப் பேணி நடந்து கொள்ளுமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கோரியுள்ளது.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள உலமா சபை உதவிப் பொதுச் செயலாளர் அஷ்ஷைக் எம்.எம்.எம். முர்ஷித் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

துல்ஹிஜ்ஜஹ் மாத முதல் பத்து நாள்களும் மிகச் சிறப்புப் பொருந்திய நாள்கள் என்பதால் எஞ்சியுள்ள நாள்களில் நல்லமல் செய்ய அனைவரும் ஆர்வம் காட்டுவதுடன், அதன் ஒன்பதாவது நாளில் அரபாவுடைய நோன்பை நோற்க ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும்.

உலகளாவிய ரீதியில் கொவிட்19 வைரஸின் தாக்கம் தொடர்ந்தும் இருப்பதனால், சுகாதார அமைச்சினால் வழங்கப்படுகின்ற அனைத்து வழிகாட்டல்களையும் உரியமுறையில் பேணி நடந்துகொள்வதுடன், பெருநாள் தொழுகையின்போது சமூக இடைவெளியை பேணுதல், முகக் கவசம் அணிதல், வீட்டிலிருந்தே வுழூ செய்துகொண்டு வருதல் போன்ற விடயங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ரி3)

# தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த மேலும் 21 பேர் விடுவிப்பு

*கொழும்பு, ஜூலை 31*

தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த மேலும் 21 பேர் நேற்று முன்தினம் மற்றும் நேற்றைய தினங்களில் தனிமைப்படுத்தல் மையங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

பூஸ்ஸ கடற்படை முகாம் மற்றும் கற்பிட்டியிலுள்ள கடற்படை தனிமைப்படுத்தல் முகாம் ஆகியவற்றிலிருந்தே இவர்கள் வெளியேறிச் சென்றுள்ளனர்.

அதன்படி, 15 பேர் பூஸ்ஸ கடற்படைத் தனிமைப்படுத்தல் முகாமில் இருந்தும் 6 பேர் கற்பிட்டி கடற்படைத் தனிமைப்படுத்தல் முகாமில் இருந்தும் வெளியேறினர்.

இவர்கள் அனைவரும் அரசாங்கத்தின் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். தனிமைப்படுத்தலை வெற்றிகரமாக முடித்த தற்கான சான்றிதழ்களும் கடற்படையினரால் வழங்கப்பட்டன.

தற்போதைய நிலவரப்படி, 61 பேர் பூஸ்ஸ கடற்படை தனிமைப்படுத்தல் முகாமிலும் 18 பேர் கற்பிட்டியில் உள்ள கடற்படை தனிமைப்படுத்தல் முகாமிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

# அவன்காட் வழக்குக்கு இடைக்காலத் தடை

*கொழும்பு, ஜூலை 31*

அவன்காட் நிறுவனத் தலைவர் நிஸங்க சேனாதிபதி மற்றும் பாலித பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிரான அவன்காட் நிறுவன வழக்கிற்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த வழக்குத் தொடர் பாக கொழும்பு உயர் நீதிமன்றில் இடம்பெறும் விசாரணைகளை இடைநிறுத்தவே மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று இந்த இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பித்துள்ளது. அவன்காட் நிறுவனத்திற்கு மிதக்கும் ஆயுத களஞ்சியசாலையை முன்னெடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கியமை, துப்பாக்கி கட்டளை சட்டத்தின் கீழ் இழைக்கப்பட்ட குற்றம் எனத் தெரிவித்து சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு உயர் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி1)



# இலங்கையிலிருந்து செல்வோருக்கு தடை விதித்தது குவைத்

*கொழும்பு, ஜூலை 31*

இலங்கை, இந்தியா, ஈரான், பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து வருபவர்களுக்கு மறுஅறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது என்று குவைத் அறிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், இந்தியா, பாகிஸ்தான், ஈரான், நேபாளம் ஆகிய நாடுகளைத் தவிர, குவைத் நாட்டவர்கள் மற்றும் அந்நாட்டில் வசிப்பவர்களுக்கு, குவைத்திலிருந்து வெளியேறவும் குவைத்துக்கு வருவதற்குமான அனுமதியை வழங்குவதற்கு அந்நாட்டு அமைச்சரவை முடிவு செய்துள்ளது எனக் குவைத் அரச தொடர்பாடல் நிலையம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திலிருந்து வர்த்தக விமான சேவைகள் பகுதியளவில் ஆரம்பிக்கப்படும் என்று கடந்த மாதம் குவைத் அறிவித்திருந்தது.

ஆயினும், கொரோனா வைரஸ் தொற்று நிலையை அடுத்து, அந்நாட்டு விமான சேவைகள் வழமைக்குத் திரும்பும் நிலையில், மேலும் ஒரு வருட காலம் வரை, விமான நிலையத்தின் முழுச் செயற்பாட்டையும் வழமைக்குக் கொண்டு வருவதை எதிர்பார்க்க முடியாது எனவும் குவைத் அறிவித்துள்ளது. (ரி1)

# தாய்ப்பாலூட்டல் வாரம் நாளை ஆரம்பம்

*கொழும்பு, ஜூலை 31*

நாளை ஓகஸ்ட் 1ஆம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரையிலான ஒரு வாரம் தேசிய தாய்ப்பால் ஊட்டும் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பில் குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டும் முக்கியத்துவம் குறித்தும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட விசேட வைத்திய நிபுணர்களைக் கொண்ட குழுவினரால் பல விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. இலங்கையில் குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டுவதில் வலுவான அடித்தளம் காணப்படுவதாகவும் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். உலக நாடுகளில் இது தொடர்பில் இலங்கை முதலாவது இடத்தில் உள்ளமை ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ் வருடம் தாய்ப்பால் ஊட்டும் வாரக் கருப்பொருளாக "தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவிப்போம் இப்புவியைப் பாதுகாக்க தோள் கொடுப்போம்" என்பது அமைந்துள்ளது. (ரி1)



# பிரேசில் ஜனாதிபதியின் மனைவிக்கு கொரோனா

பிரேசிலியா, ஜூலை 31

பிரேசில் ஜனாதிபதி ஜேர் போல்சனாரோ மனைவி மிச்செல் போல்சனாராவுக்கும், அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள மற்றொரு மூத்த அமைச்சருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று மருத்துவர் குழு அறிவித்துள்ளது. ஏற்கெனவே பிரேசில் ஜனாதிபதி ஜேர் போல்சனாரோ கொரோனாவால் பாதிக்கப்பட்டு கடந்த 20 நாட்களுக்கு மேலாக சிகிச்சைபெற்று வந்தார். கடந்த சனிக்கிழமை உடல்நலம் தேறிய நிலையில் தற்போது அவரின் மனைவிக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. பிரேசிலின் அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் மார்கோஸ் பாண்ட்ஸ் தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளதாவது,

ப்ளூ காய்ச்சல் அறிகுறியும், தலைவலியும் இருப்பதால் நான் கொரோனா பரிசோதனை செய்தேன். அதில் எனக்குத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இப்போது என்னை நான் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார். (ரி1)

# சீனாவிலிருந்து அமெரிக்காவுக்கு மர்ம விதைகள்

## மீண்டும் ஒரு புதிய சர்ச்சை

வொஷிங்டன், ஜூலை 31

அமெரிக்காவில் வசிக்கும் பலருக்கும் தபால்மூலம் மர்ம விதைகள் பொதியில் வருகின்றமை மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பொதிகள் சீனாவிலிருந்து வருகின்ற, ஓர் உயிரி ஆயுதமாக இருக்கலாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்த விதைகளை யாரும் அவசரப்பட்டு நிலத்தில் விதைக்க வேண்டாம், அது விவசாயத்தை அழிக்கும் உயிரி ஆயுதமாக இருக்கலாம் என்று கனடாவும் எச்சரிக்கை விடுத் துள்ளது. இது தொடர்பில் அமெரிக்க விவசாயத்துறை சுங்கத்துறையினர் மற்றும் எல்லை அதிகாரிகளுடன் அமெரிக்க உளவுத்துறை இணைந்து விசாரணை செய்து வருகின்றனர்.

இதேவேளை இக் குற்றச்சாட்டை சீனா கடுமையாக மறுத்துள்ளது, தபால்மூலம் சீனாவிலிருந்து விதைகளை அனுப்ப அனுமதி கிடையாது.

அந்த விதைப் பொதியில் உள்ள தபால் முத்திரை போலியானது என்றும் அதன் மேல் குறிப்பிடப்பட்ட தகவல்கள் பிழையானவை என்றும் தெரிவித்துள்ளது. இந்தப் பொதிகளை சீனாவுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் சீனாவே இதை விசாரிக்கும் என்றும் தெரிவித்துள்ளது. கனடாவிலும் பண்ணை விவசாயம் செய்யும் பலருக்கு இத்தகைய விதைகள் பொதிகளில் வந்துள்ளன. இதனை கனடா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் விசாரணை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி1)



அமெரிக்காவில் முதற்தடவையாக

# கொரோனாவால் நாய் உயிரிழப்பு

நியூயோர்க், ஜூலை 31

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டிருந்த ஜெர்மன் ஷெப்பெர்ட் இனத்தைச் சேர்ந்த நாய் ஒன்று நேற்று உயிரிழந்தது. கொரோனாவால் பாதிக்கப்பட்ட நாய் ஒன்று அமெரிக்காவில் உயிரிழப்பது இதுவே முதற் தடவையாகும்.

இதுவரை அமெரிக்காவில் 12 நாய்கள், 10 பூனைகள், ஒரு புலி, ஒரு சிங்கம் ஆகியவற்றுக்கு கொரோனாத் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டாலும் எந்த மிருகங்களும் உயிரிழக்கவில்லை. ஆனால், முதல் முறையாக மிருகங்கள் கொரோனாவில் உயிரிழப்பைச் சந்திப்பது மக்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. (ரி1)






# ‘பரியேறும் பெருமாள்’ போல் ‘கர்ணன்’ ஒதுங்கிப் போகமாட்டான்!

### மாரி செல்வராஜ்

கலைப்புலி எஸ்.தானு தயாரிப்பில், மாரி செல்வராஜ் இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் வெளியாக இருக்கும் படம் கர்ணன். எப்போதும் போல இந்தப் பெயருக்காகவே இப்படத்தின் எதிர்பார்ப்பு அதிகமாகி இருக்கிறது. மேலும் படத்தின் இயக்குநர் மாரி செல்வராஜுக்கு முதல் படமான ‘பரியேறும் பெருமாள்’ சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கமும் இதற்கு முக்கியக் காரணம். ‘கர்ணன்’என்று பெயர் வைத்ததாலோ என்னவோ மகாபாரத கர்ணன் போன்றதுதான் தனுஷின் கதாபாத்திரமா என்ற கேள்விகள் ரசிகர்கள் மத்தியில் பேசப்பட்டு வருகிறது.

கர்ணன் படம் தொடர்பாக ஏற்கனவே போஸ்டர்கள் வெளியாகி இருந்த நிலையில், தனுஷ் பிறந்த நாளையொட்டி சிங்கிள் டிராக் ஒன்று வெளியாகி இருந்தது. அதில், நாதஸ்வர இசையுடன் படப்பிடிப்பு தளம் உருவாகும் விதத்தைக் காட்சிப்படுத்தி இருக்கும். இறுதியில் தனுஷின் ஒரு காட்சி மட்டும் சில நொடிகள் வரும். ஏற்கனவே வெளியான போஸ்டர்களிலும் சரி, இந்த காட்சியிலும் சரி சூரிய ஒளியோடு தனுஷ் இருப்பது போல் தான் இருக்கும். இந்தக் காணொலியிலும் தனுஷ் வால் பிடித்து ஆக்ரோஷமாக நிற்பது போலவும், வானமெல்லாம் ரத்த கறையாக மாறுவது போலவும் இருக்கும்.

மகாபாரத்தில் வரும் கர்ணனுக்கும் சூரியனுக்கு உள்ள தொடர்பு அனைவரும் அறிந்ததே. இதனால், மகாபாரத கதையின் தாக்கம் கர்ணனில் நிச்சயம் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

பரியேறும் பெருமாள் படத்தின் நாயகன் போல இத்திரைப்படத்தில் தனுஷ் ஒதுங்கிப் போகமாட்டார், நியாயத்துக்காக குரல் கொடுப்பதிலும் உரிமைகளைப் போராடி திரும்பப்பெறும் கதாபாத்திரமாகவுமே இந்தக் கர்ணன் இருப்பான் என படத்தின் இயக்குநர் மாரி செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

# கொரோனாவுக்கு ...

துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் கொரோனாத் தொற்றுப் அச்சம் காரணமாக மக்கள் வாக்களிப்பதற்கு தயங்குகிறார்கள் அல்லது பயப்படுகிறார்கள் என்ற நிலைமை காணப்படுகின்றது . உண்மையில் மக்கள் கொரோனா தொடர்பில் அச்சப்படத் தேவையில்லை.

நாங்கள் வாக்களிப்பின் போது கொரோனாத் தொற்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். எம்மைப் பொறுத்த வரைக்கும் ஏற்கனவே சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி எவ்வாறு வாக்களிப்பினை மேற்கொள்வது தொடர்பாக மாதிரி வாக்களிப்பினை பரீட்சித்துப் பார்த்திருக்கிறோம். தேர்தல் தினத்தன்று வாக்குச் சாவடியில் வாக்களிப்பின் போது கொரோனாத் தொற்று ஏற்படகூடிய சாத்தியக் கூறு குறைவானதாகவே இருக்கும். அதாவது நீங்கள் வீதியில் பயணிக்கும் போதோ அல்லது தங்களுடைய அன்றாட கடமைகளைச் செய்யும்போதோ கொரோனாத் தொற்று ஏற்படுகின்ற வாய்ப்பை விட வாக்களிப்பு நிலையத்துக்குள் தொற்று ஏற்படக்கூடிய சாத்தியக் கூறு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. அத்தோடு நீங்கள் வாக்களிப்பு நிலையத்துக்குள் செல்லும் போது மாஸ்க் அணிந்து கைகளை கழுவி ஏனையோர் பாவித்த பேனைகளைப் பாவிக்காத வகையில் பல சுகாதார நடைமுறைகளை வாக்களிப்பு நிலையங்களில் மேற்கொண்டுள்ளோம். எனவே உங்களுக்குரிய வாக்களிப்பு உரிமையை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் -என்றார். (20)

# வாள்முனையில்...

வருவதாவது,
யாழ்ப்பாணம் உரும்பிராய் மேற்கு , சோளம் தோட்டப் பகுதியில் உள்ள அந்த வீட்டின் பின்பக்கமாக சென்ற நபர்கள் வீட்டின் கதவினை உடைக்க முற்பட்டுள்ளனர். இதன்போது சத்தம் கேட்டு வீட்டிலுள்ளவர் வெளியில் வந்துள்ளார். இதன்போது அவரைக் கொள்ளையர்கள் கம்பியால் தாக்கியதுடன் வீட்டில் இருந்தவர்களை வாளைக் காட்டி அச்சுறுத்தினர். அத்துடன் வீட்டில் இருந்த நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இதன்போது வீட்டில் இருந்தவர்கள் அவலக் குரல் இட்டுள்ளனர். அயலவர்கள் ஓடி வந்த போதும் கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-20)

# சம்பந்தன், ஹக்கீம்,....

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பயங்கரவாதிகளின் தனிநாட்டுக் கோரிக்கையுடன் வலம் வரும் சம்பந்தனை எப்படி நாம் நம்புவது? அதேபோல் அடிப்படைவாதிகளுடன் தொடர்பு வைத்திருக்கும் ரிஷாத் பதியுதீனையும், ரவூப் ஹக்கீமையும் எப்படி நாம் நம்புவது? இவர்கள் மூவருமே மன்னிக்க முடியாதவர்கள்.
தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளான இவர்கள், அம்மக்களின் நலன் சார்ந்து செயற்படவில்லை. தங்கள் சுயலாபம் கருதியே அரசியல் நடத்துகின்றார்கள். இவர்கள் மூவரும்தான் கடந்த நல்லாட்சி அரசுக்கு முண்டுகொடுத்தவர்கள். ஆனால், இவர்களை நம்பி நாடாளுமன்றம் அனுப்பிய மக்கள் எந்தப் பயனையும் பெறவில்லை. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பிணைமுறி மோசடிக்காரர்களைக் காப்பாற்றிய இம்மூவரும் இன்று எமது அரசை வெட்கமில்லாமல் விமர்சிக்கின்றார்கள். இவர்கள் மூவரும் நாட்டுக்கு ஆபத்தானவர்கள். இவர்களின் கோரிக்கைகள் எதனையும் ராஜபக்ச அரசு நிறைவேற்றவே மாட்டாது. பொதுத்தேர்தலில் பின்னர் ஹக்கீம், ரிஷாத் ஆகியோரை அரசில் இணைக்கவேமாட்டோம். மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் மிகவும் பலமிக்க ஆட்சியை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி நிறுவியே தீரும். தமிழ், முஸ்லிம் மக்களுடன் நாம் நேரில் பேசி அவர்களின் குறைகளைத் தீர்த்து வைப்போம் -என்றார். (ஏ-22)

# நேருக்கு நேர் கூட்டம்:...

பரப்புரை இறுதி நாளான ஓகஸ்ட் 2 ஆம் திகதி, கிளிநொச்சி நகரின் மத்தியில் உள்ள பசுமைப் பூங்கா மைதானத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தை நடத்துவதற்கு முற்கூட்டியே அனுமதி பெறப்பட்டிருந்தது. இந்த நிலையில் தற்போது மத்திய கல்லூரியின் மைதானத்திலும் அதே தினத்தில் அதே நேரத்தில் சந்திரகுமார் தலைமையிலான சுயேச்சைக்குழுவின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தை நடத்தவும் பொலிஸார் அனுமதி கொடுத்துள்ளனர். இவ்வாறு ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் கூட்டம் நடத்துவது பொருத்தமற்ற செயலாக இருக்கும் என்பதோடு, கட்சி ஆதரவாளர்களிடையே முரண்பாட்டையும், குழப்பத்தையும் தோற்றுவிக்கும் எனவும், எனவே இது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டும் என்று முறையிடப்பட்டுள்ளது. (அ)

# களவெடுக்க....

பக்க கதவை திறந்து விட்டு ,வீட்டு உரிமையாளர்கள் உறங்கிக் கொண்டிருந்தனர். இந்தச் சமயத்தில் அதிகாலை ஒரு மணியளவில் குழந்தைக்கு பால் கொடுப்பதற்காக வீட்டிலுள்ள பெண் உறக்கத்தில் இருந்து எழுந்தபோது, வீட்டுக்கு வெளியே நாய் பலமாகக் குரைப்பதை அவதானித்துள்ளார். அப்போது யாரோ நடக்கும் சத்தமும் அவருக்குக் கேட்டுள்ளது. அதன் பின்னர் பின்பக்க கதவு திறக்கும் சத்தத்தை அடுத்து ஒருவர் வீட்டிற்குள் நுழைவதை அந்தப் பெண் கண்டுவிட்டார்.
இதனையடுத்து, அவர் கூக்குரல் இட , தூக்கத்தில் இருந்து விழித்த அவரது கணவரும், மாமனாரும் திருடனை துரத்திச்சென்று, மடக்கிப் பிடித்தனர். திருடனைக் கைது செய்த நெல்லியடிப் பொலிஸார், சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (அ-422)

# 166 பேர்...

பட்டுள்ளனர் .
ஜோர்தான் நாட்டில் தங்கியிருந்த நிலையில் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டவர்களே இவ்வாறு இயக்கச்சியில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.
இவர்களுக்கான பி. சி.ஆர் பரிசோதனைகள் நடைபெற்று, கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 166 பேரே இவ்வாறு சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் .(அ ,6, 113 ,)

# சகல மாணவருக்கும்...

வர்களில் 39 லட்சம் பேரின் தகவல்கள் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள 4 லட்சம் மாணவர்களின் தகவல்களை துரிதமாக கணினிமயப்படுத்திய பின்னர், இந்த நடவடிக்கை அமுலுக்குவரும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.
கல்வியமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.
மாணவர்களுக்கு அடையாள இலக்கம் வழங்கப்பட்ட பின்னர், மாணவர்கள், அந்த இலக்கத்தை 5 ஆம் ஆண்டு புலைமைப்பரிசில் பரீட்சை, சாதாரண தரம், உயர்தரப் பரீட்சைகள், விளையாட்டு உட்பட ஏனைய திறமை சார் போட்டிகளுக்கு பயன்படுத்த முடியும்.
முதற்கட்டமாக தற்போது பாடசாலைகளில் கற்கும் மாணவ, மாணவிகளுக்கு அடையாள இலக்கங்கள் வழங்கப்படவுள்ளன. அடுத்த ஆண்டு முதல் மாணவர்களைப் தரம் 1 இல் பாடசாலைகளுக்கு சேர்க்கும் போது அவர்களுக்கு அடையாள இலக்கங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் டளஸ் அழகப்பெரும குறிப்பிட்டுள்ளார். (அ)

## புதினம் தெரியுமோ?

**ஏர்களுக்கு வாக்களிக்கலாம் என்றும் தன்னார்வலர்கள் சிலர் மக்களுக்கு அறிவூட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர். என்னதான் இருந்தாலும் தான் வெல்றதுக்காக இப்பிடி இல்லாத சட்டமெல்லாம் சொல்றது ஓவர் 'கப்சா தான்.**

**(நேற்றைய புதினம் தெரியுமா பகுதியின் தொடர்ச்சி தொழினுட்பக் கோளாறு காரணமாக தவறுதலாகப் பிரசுரமாகாமல் போய்விட்டது. அந்தப் பகுதியின் முழுவடிவமும் இன்று கீழே பிரசுரமாகின்றது.)**

2012 ல ஒரு சம்பவம். யாழ்ப்பாணத்தில் பிரபலமான மகளிர் கல்லூரி அதிபர் விவகாரமே அது. ஒரு பிள்ளைக்கு இரு தாய் கதை போல, ஒரே கல்லூரிக்கு இருவர் அதிபர்களாக உரிமை கோரினர். ஒருவர் ஏற்கனவே அந்தப் பாடசாலையில் பதில் அதிபராக இருந்தவர். இன்னொருவர் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டவர். திணைக்களத்தால் நியமிக்கப்பட்டவர் கடமையைப் பொறுப்பேற்கச் சென்றபோது, பதில் அதிபராக இருந்தவர்,ஒரு அடாவடி அரசியல் கட்சியின் ஆசீர்வாதம் தனக்குள்ளது என்ற தைரியத்தில் இடையூறு செய்தார். தன் பொறுப்புகளை, புதிதாக வந்தவரிடம் ஒப்படைக்க மாட்டேன் என்று ஒற்றைக்காலில் நின்றார். விடயம் நீதிமன்றம் வரை போனது. திணைக்களத்தால் அனுப்பப்பட்ட அதிபரே சட்டபூர்வமான அதிபர் என்று முடிவானதுடன், இடையூறு செய்த அடாவடிப்பதில் அதிபர் பாடசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டிருந்தார். ஆனாலும் அவர் ஓயவில்லை. இப்போது எங்கேயோ கொழும்பில் இருந்த நிர்வாகத் தீர்ப்பாயம் ஒன்றினை, தனக்கு ஆதரவு கொடுக்கும் கட்சியின் பிரமுகர் மூலம் கண்டுபிடித்து, அதனூடாக மீண்டும் பழைய பாடசாலையிலேயே பணியாற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது, அதனால் முன்னர் எந்தப் பாடசாலையில் 'நானே அதிபர்' என்று அடாவடி செய்தாரோ அதே பாடசாலையில் வெற்றிடமாக இருந்த பிரதி அதிபர் பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
இப்போது இன்னொரு குழப்பம். ஏற்கனவே அங்கிருந்த அதிபர் ஓய்வுபெற்றுவிட்டதால் ,புதிதாக இன்னொருவரை அந்தப் பாடசாலைக்கு திணைக்களம் நியமித்திருந்தது. ஆனால் அந்தப் புதிய அதிபர், இப்போது பிரதி அதிபர்களில் ஒருவராக உள்ள முன்னைய அடாவடிப் பதில் அதிபரை விடவும் சேவைக்காலத்தால் இளையவர். அதனால் அவர் இந்தப் பாடசாலைக்கு வருவதைத் தவிர்த்துவிட்டார். இந்த முடிவால் காற்று இப்போது அடாவடிப் பிரதி அதிபர் பக்கம் அடிக்கத் தொடங்கியுள்ளது. சிலவேளைகளில் அதிபர் என்ற ஒருவர் இல்லாமலேயே அடுத்துவரும் காலங்கள் அந்தப் பாடசாலையின் நிர்வாகம் இந்தப் பிரதி அதிபரிடம் சிக்கக் கூடும். திணைக்களம்தான் சரியான முடிவை எடுக்க வேண்டும்.

பட்சி

# சஜித்துக்கு ஆதரவளித்த..

வேட்புமனுக்களை தாக்கல் செய்த உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த அதிரடி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. 54 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் 61 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் அடங்கலாக 115 பேரை சில தினங்களுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி நீக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.இதன் அடுத்த கட்டமாகவே இன்று மேலும் 37 பேர் நீக்கப்பட்டுள்ளனர். (அ-22)

# பிள்ளையானுக்கு...

சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) வெற்றி பெற்றால் அவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வாக்குறுதியளித்துள்ளது. இந்தத் தகவலை பிள்ளையானுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என்று 'டெய்லிமிரர்' செய்தி வெளியிட்டுள்ளது.
எனினும், அவர் சிறையிலிருந்து பிணையில் விடுதலையானால் மாத்திரமே அமைச்சுப் பதவியை வழங்க முடியும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தெரிவித்துள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் கைதுசெய்யப்பட்டிருந்த பிள்ளையான் தற்போது சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
பிள்ளையானைத் தொடர்ந்தும் சிறையில் வைத்திருப்பதன் மூலம் அவருக்கு அமைச்சுப் பதவி கிடைப்பதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று அவரின் சகா ஒருவர் தெரிவித்தார் எனவும் 'டெய்லிமிரர்' செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-22)

# 'வீக் கொரோனா'...

குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டு, வடக்கு மாகாணம் மற்றும் வெளி மாகாணங்களைச் சேர்ந்த சுமார் 70 பேர் அவர்களது வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்பட்டுள்ளனர்.
சவுதி அரேபியாவிலிருந்து கடந்த 7ஆம் திகதி நாடு திரும்பிய ஒருவர் விடத்தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தார்.
அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டிருந்த நிலையில் ,யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு 7ஆம் விடுதியில் சிகிச்சை பெற்றார். கடந்த 25ஆம் திகதிவரை அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார் என்று சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.
அதன் பின்னர் அவர் விடத்தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு மீள மாற்றப்பட்டிருந்தார்.
அவருக்கு 'வீக் கொரொனா' தொற்று உள்ளமை கடந்த திங்கட்கிழமை உறுதிப்படுத்தப்பட்டது. அதனால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் 7ஆம் விடுதியில் பணியாற்றும் மருத்துவ சேவையாளர்கள் நால்வர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர் என மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்திருந்தார்.
இந்த நிலையிலேயே தற்போது 70 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (அ,20)

# அயர்லாந்தை எளிதாக வீழ்த்தியது இங்கிலாந்து

லண்டன், ஜூலை 31

அயர்லாந்துக்கு எதிரான முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.




அயர்லாந்து அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகின்றது. சவுத்தாம்ப்டனில் நடந்த முதல் ஒருநாள் ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் பந்துவீச்சைத் தெரிவுசெய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 28 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து தடுமாறியது. அந்த அணியில் கேம்பர், பொறுப்புடன் ஆடி அரைச் சதமடித்தார். அவர் 59 ஓட்டங்கள் எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். கடைசி கட்டத்தில் மெக் பிரின் 40 ஓட்டங்கள் சேர்த்தார்.

இறுதியில் அயர்லாந்து அணி 44.4 பந்துப்பரிமாற்றத்தில் 172 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது.

இங்கிலாந்து சார்பில் வில்லே 5 இலக்குகளையும், சாகிப் முகமது 2 இலக்குகளையும் வீழ்த்தினார். 173 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து களமிறங்கியது. அந்த அணி முதலில் இருந்தே அடித்து ஆடத் தொடங்கியது. சீரான இடைவெளியில் இலக்குகளும் வீழ்ந்தன.

சாம் பில்லிங்ஸூம், இயன் மார்கனும் அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர். சாம் பில்லிங்ஸ் அரைச் சதமடித்தார். அவர் 67 ஓட்டங்களுடனும், இயன் மோர்கன் 36 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இறுதியில், இங்கிலாந்து அணி 27.5 பந்துப்பரிமாற்றத்தில் 4 இலக்குகளுக்கு 174 ஓட்டங்கள் எடுத்து எளிதில் வெற்றிபெற்றது. இதன்மூலம் 1:0 என தொடரில் முன்னிலை வகிக்கிறது இங்கிலாந்து தொடரில் வில்லே ஆட்ட நாயகன் விருது பெற்றார். (ரி2)

IPL

## ஐ.பி.எல். திகதி மாற்றம்

கொழும்பு, ஜூலை 31

ஐ.பி.எல் 2020 தொடரின் இறுதிப் போட்டி நவம்பர் 8 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது 10 ஆம் திகதிக்கு தள்ளிப்போக வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் நடைபெறவிருந்த ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டி கொரோனா வைரஸ் தொற்றால் ஒத்திவைக்கப்பட்டது. ஆஸ்திரேலியாவில் நடைபெறவிருந்த ரி20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் ஒத்திவைக்கப்பட்டதால், செப்ரெம்பர் 19 ஆம் திகதி முதல் நவம்பர் 8 ஆம் திகதி வரை ஐ.பி.எல் நடைபெறும் என்று அதன் தலைவர் பிரிஜேஷ் பட்டேல் தெரிவித்திருந்தார்.

அணி நிர்வாகம், பங்குதாரர்கள், ஒளிபரப்பு நிறுவனம் ஆகியவை கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஐ.பி.எல் நிர்வாகம் ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதியில் தொடங்க இருந்த ஐ.பி.எல் போட்டியை செப்ரெம்பர் 19 இல் இருந்து நவம்பர் 8 ஆம் திகதி வரை நடத்த திட்டமிட்டிருந்தது.

ஆனால், ஒளிபரப்பு நிறுவனமான ஸ்டார் நவம்பர் 14 ஆம் திகதி தீபாவளி வருவதால் பண்டிகை வாரத்தை சரியான வகையில் பயன்படுத்திக் கொள்ள விரும்பியது. இதனால் தீபாவளிக்கு முன்னர் போட்டியை நடத்த வலியுறுத்தியது.

எப்போதும் ஞாயிற்றுக்கிழமையில் தான், ஐ.பி.எல். இறுதிப் போட்டி நடைபெறும். தற்போது ஸ்டார் நிறுவனம் கேட்டுக் கொண்டதன் படி ஐ.பி.எல் போட்டியை இரண்டு நாள்கள் நீடிக்க ஐ.பி.எல் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. இதனால் நவம்பர் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இறுதிப் போட்டியை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 10 ஆம் திகதி அதிகார பூர்வமாக இறுதிப் போட்டி நடைபெறும் என்றால் முதன் முறையாக ஞாயிற்றுக்கிழமை அல்லாத தினத்தில் ஐ.பி.எல் இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது. ஓகஸ்ட் 2 ஆம் திகதி நடைபெறும், ஐ.பி.எல் ஆட்சி மன்றக்குழுவில் இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரியவருகின்றது. (ரி2)



## “அப்பா” ஆனார் ஹர்திக் பாண்ட்யா!

புதுடில்லி, ஜூலை 31

இந்திய கிரிக்கெட் அணியின் ஓல்ரவுண்டர் ஹர்திக் பாண்ட்யாவுக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது.

இந்திய அணியின் இளம் வேகப் பந்து வீச்சு ஓல்ரவுண்டர் ஹர்திக் பாண்ட்யா. இவர் செர்பியா நடிகை நடாஷா ஸ்டான்கோவிச்சை காதலித்து வந்தார். இவர்கள் இருவரும் கடந்த ஜனவரி மாதம் புத்தாண்டையொட்டி வெளிநாட்டில் நடுக்கடலில் வைத்து மோதிரம் மாற்றிக்கொண்டு காதலை வெளிப்படுத்தினர்.

அதன்பின் லொக்டவுன் காலத்தில் அவர்களது திருமணம் எளிமையாக நடைபெற்றது. இந்தத் திருமணம் இரகசியமாகத் நடந்திருந்தது. கடந்த ஒருமாதமாக தனது மனைவி கர்ப்பமாக இருக்கும் படத்தை சமூக வலைத்தளங்களில் ஹர்திக் பாண்ட்யா வெளியிட்டு வந்தார்.

இந்நிலையில் நேற்று மதியம் 3.45 மணியளவில் ஆண் குழந்தை பிறந்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.(ரி2)




## கின்னஸில் இடம்பெற்ற ஆஸ்திரேலிய ஒட்டகச்சிவிங்கி



ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாண்ட் மிருகக்காட்சிச் சாலையில் உள்ள ஒட்டகச்சிவிங்கிதான் உலகிலேயே மிக உயரமானது என கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. பன்னிரண்டு வயதுள்ள அதன் உயரம் 18 அடி எட்டு அங்குலம்.

உயரத்தில் சாதனை படைத்துள்ள ஒட்டகச் சிவிங்கிக்கு ‘ஃபாரஸ்ட்’ எனப் பெயரிட்டுள்ளனர். மிருகக்காட்சி சாலை அதிபரான பிந்தி சூ இர்வின், அந்த ஒட்டகச் சிவிங்கியுடன் எடுத்துக்கொண்ட புகைப்படங்களை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டு மகிழ்ந்துள்ளார்.

இந்த ஒட்டகச்சிவிங்கியின் உயரத்தை அளப்பதற்கு மிகவும் சிரமப்பட்ட தாக கின்னஸ் சாதனைப் புத்தக செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது. அதற்காக ஊழியர் ஒருவர் அளவுகோல் கம்பத்தை உருவாக்கியதாகவும், அதை அருகில் கட்டி உயரம் பார்க்க வேண்டியிருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளனர்.



# கல்வியின் ஒளியே

நீ மீண்டும் மீண்டும் வருக!

35 வருடங்களாக ஓயாத விலைபோகாத தலைமை



**ஈ. சரவணபவன்**

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
உதயன் குழுமத் தலைவர்

X 4


இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 31.07.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.